<u>கொரோனா தடுப்பு - அவசரம்</u>

**புதுச்சேரி அரசு**
**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

நாள் : 19.03.2020

**பத்திரிகைச் செய்தி**
(இன்றைய நடவடிக்கைகளின் தொகுப்பு)

கொரோனா வைரஸ் பாதிப்பு தடுப்பு நடவடிக்கையாக, புதுச்சேரி அரசு அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின்கீழ் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக இன்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் Dr.T. அருண், இ.ஆ.ப. அவர்கள் பத்திரிகையாளர்களிடம் கூறியதாவது:-

- கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக கோயில்கள் மசூதிகள் மற்றும் தேவாலயங்களில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்து அறநிலையத்துறை மற்றும் வக்பு வாரியத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. குறிப்பாக வழிபாட்டுத் தலங்களின் நுழைவுவாயில்களில் கைகளைச் சுத்தம் செய்வதற்கான Hand Sanitizer வைக்க வேண்டும் என்றும் கொரோனா வைரஸ் குறித்த விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- இன்று காலை வர்த்தக நிறுவன உரிமையாளர்களுடனான கூட்டம் நடைபெற்றது. இதில் வாடிக்கையாளர்கள் நலன் கருதி, Hand Sanitizer வைக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

- அனைத்து ஓட்டல்களிலும் தங்குவதற்காக வருகை தரும் விருந்தினர்களிடமும், சீனா, கொரியா, பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின், இத்தாலி மற்றும் ஈரான் போன்ற நாடுகளுக்கு கடந்த ஓராண்டில் சென்று வந்திருந்தால் அதனுடைய விபரம் மற்றும் அந்த நாடுகளுக்கு சென்று வந்த நபர்களைச் சந்திருத்திருந்தால் அதுகுறித்த சுயஉறுதிமொழியை (Self Declaration) ஓட்டல் நிர்வாகம் பெறவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஓட்டல் நிர்வாக்ங்கள், விருந்தினர்கள் தரும் இந்த சுயஉறுதிமொழி விபரங்களை கீழ்காணும் நலவழித்துறை

அலுவலர்களிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டிற்கு சமீபத்தில் சென்று வந்தவர்களைத் தனியாக கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

24 மணிநேரமும் இயங்கும் அழைப்பு மையம் : 104 (அ)
Dr. வித்யா: 9176685072 / Dr. அருணா : 8056697931

- சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு, கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மற்றும் இதர அத்தியாவசிய கூட்டம் தவிர வழக்கமான அலுவல்சார் கூட்டங்கள், சந்திப்புகள் போன்றவற்றை தவிர்க்கவேண்டுமென்று அனைத்துத் துறைகளையும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

- முகக்கவசம் கிடைப்பதில் நிலவி வரும் தட்டுப்பாட்டைப் போக்க, சுயஉதவிக் குழுக்கள் மூலம் முகக் கவசம் (Face Mask) தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாளொன்றுக்கு பத்தாயிரம் வீதம் ஒரு இலட்சம் முகக் கவசம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு சுயஉதவிக்குழுக்கள் மூலம் தயாரிக்கப்படும் முகக்கவசங்கள் நலவழித்துறை மூலம் சுகாதாரப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு முதலில் வழங்கப்படும். பின்னர் காவலர்களுக்கும், அங்கன்வாடி ஊழியர்களுக்கும், ஆஷா ஊழியர்களுக்கும் வழங்கப்படும். இதுதவிர, Hand Sanitizer கிடைப்பதில் நிலவும் தட்டுப்பாட்டைப் போக்க சுய உதவிக்குழுக்கள் மூலம் Hand Sanitizer தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட உள்ளது.

- கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக புதுச்சேரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு நூலகங்களையும் மூடவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது

**T. ARUN, IAS**
**DISTRICT COLLECTOR -cum-**
**DISTRICT MAGISTRATE**
**PUDUCHERRY**